தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை 6
ந.க. எண் 004263/இ1/2014 நாள் 22 .02.2014

பொருள் தமிழ்நாடு தொடக்கக் கல்வி – தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி 7 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி 25.02.2014 அன்று உள்ளிருப்பு வேலைநிறுத்தப் போராட்டமும் 26.02.2014 அன்று ஒருநாள் அடையாள வேலைநிறுத்தப் போராட்டமும் நடத்தவுள்ளது – மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைக் குறித்த அறிவுரைகள் வழங்குதல் சார்பாக.

பார்வை 1) தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி பொதுச் செயலாளரின் கடிதம் நாள் 11.02.2014.

******

மேற்காணும் பொருள் சார்ந்து, மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து அனைத்து மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

1) தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி 25.02.2014 அன்று நடத்தவுள்ள உள்ளிருப்பு போராட்டம் மற்றும் 26.02.2014 அடையாள வேலைநிறுத்தத்தின் காரணமாக எந்தப் பள்ளிகளும் மூடப்படக்கூடாது.
2) அனைத்து பள்ளிகளும் மேற்படி நாட்களில் முழுமையாக செயல்படும் விதத்தில் மாற்றுப்பணியில் மற்ற பள்ளிகளிலிருந்தும், வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்ளாத ஆசிரியர்களைக் கொண்டும் எழுத்துபூர்வமாக ஆணை அளித்து ஆசிரியர்களை அமர்த்த வேண்டும்.
3) இத்தகைய மாற்றுப்பணிக்கு ஆசிரியர் பயிற்றுனர்களையும் பயன்படுத்திக்கொள்ளலாம்.
4) மாற்றுப்பணியில் அமர்த்தப்பட்டு பள்ளிக்குச் செல்லாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கவும்.
5) மேற்குறிப்பிட்ட இரு நாட்களிலும் வேலை நிறுத்தத்தில் கலந்துகொள்பவர்கள் பட்டியலை அந்தந்த நாட்களில் காலை 10.00 மணிக்குள் இயக்குநருக்கு கிடைக்கும் விதத்தில் இ–மெயில் மூலம் அனுப்ப வேண்டும்.
6) 22.02.2014 அன்று மதியம் உதவி தொடக்கக் கல்வி அலுவலர்களின் கூட்டத்தில் மேற்கூறிய விவரங்களைக் கூறுமாறும், அதன்படி செயல்படுமாறு உதவி தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட வேண்டும்.
7) மேற்குறிப்பிட்ட போராட்ட தினங்களில் பள்ளிகள் அனைத்தும் செயல்பட்டு சுமுகமான சூழ்நிலை நிலவும் விதத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு, மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள் 25.02.2014 அன்று நடைபெறவுள்ள அலுவலர்களுக்கான கூட்டத்தில் கலந்துகொள்வதிலிருந்து தவிர்ப்பு வழங்கப்படுகிறது.
8) உதவி / கூடுதல் உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் முழு [illegible] கட்டுப்பாட்டிலுள்ள பள்ளிகள் நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும் என அறிவிக்கப்படுகிறது.

எனவே, மேற்குறிப்பிட்டுள்ளவாறு செயல்படுமாறு அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

தொடக்கக் கல்வி இயக்குநர்.

பெறுநர் அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள்.
நகல் திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வித் திட்டம், சென்னை – 6 அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.

www.kalvikural.com